ந.க.எண் 191 / 2010

சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி,
நாள் : 09-08-2010

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குள் நடைபெற உள்ள வேலைகள் மற்றும் இதற்கான மதிப்பீடு செலுத்தப்பட வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி செட்யூல் படிவத்தின் விலை முதலான விபரங்கள் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சேத்தூர் பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து இப்பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரால் அங்கீகாரம் பெறப்பட்ட அலுவலர் ஒருவரால் 25-08-2010-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் **3.00** மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் 25-08-2010ம் தேதி பிற்பகல் **3.30**மணிக்கு பிரிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கான செட்யூல் படிவத்தை இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகையினை 24-08-2010-ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் **4.00** மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்கள் வேண்டுபவர் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் / வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | செட்யூல் கிரையம் + விற்பனை வரி ரூபாய் | டேவணித் தொகை ரூபாய் | வேலை முடிக்கப்பட வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | **பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010–2011**<br>சேத்தூர் பேரூராட்சி 12, 13, வது வார்டு ஆதிதிராவிடர் பறையர் தெருவிற்கு காளியம்மன் கோவில் அருகில் சமுதாய கூடம் கட்டுதல் | 1000000 | 1560 | 10000 | 120 நாட்கள் |

வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் கீழ்க்கண்டுள்ள இணைய தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் www.tenders.tn.gov.in (or) http://townpanchayats.tn.gov.in/tender

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
சேத்தூர் – 626 121

**பெறுநர் :–**

சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் அனைவருக்கும்.

**நகல் :–**

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**விளம்பரப்பலகை :–**

1. சேத்தூர் பேரூராட்சி அலுவலக விளம்பரப் பலகை.
2. செயல் அலுவலர்கள், செட்டியார்பட்டி மற்றும் மம்சாபுரம் பேரூராட்சி.
3. வட்டார வளர்ச்சி அலுவலர், இராஜபாளையம்.
4. நகராட்சி ஆணையாளர், இராஜபாளையம்.
5. பேரூராட்சிகளின் திட்டப்பணி உதவி செயற்பொறியாளர், சிவகங்கை.
6. பேரூராட்சிகளின் திட்டப்பணி உதவிபொறியாளர், சேத்தூர் தொகுப்பு.

## சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்

## ஒப்பந்தப்புள்ளிகளுக்கான நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை பதிவு அஞ்சல் மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பலாம். அஞ்சலக கால தாமத்திற்குப் பேரூராட்சி பொறுப்பு ஏற்காது.

2. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர் செயல் அலுவரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி என்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளிதான் அனுப்பவேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித்தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தியதற்கான இரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாமல் இணைத்து அனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தாரர்களுடைய டேவணித்தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான பிணை வைப்புத்தொகையாக அலுவலகத்தில் தக்கவைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியிலிருந்து வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது.

4. மதிப்பீடு தொகைக்கு குறைவான விகிதத்தில் வேலையை செய்வதாக ஒப்புக் கொள்கிறவர்கள் மதிப்பீட்டுத்தொகையிலிருந்து 10% வரை குறைவாகக் கொடுத்துள்ளவரது ஒப்பந்தப்புள்ளி பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மதிப்பீடு தொகையிலிருந்து 10% கூடுதலான விகிதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு அதற்குரிய கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தினால்தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கும் பேரூராட்சியிலிருந்து வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. கூடுதலாக பெறப்பட்ட பிணை வைப்புத்தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று முடிவு அறிக்கை வந்தபின் திரும்ப வழங்கப்படும்.

5. டேவணித்தொகை செலுத்தப்படாத ஒப்பந்த புள்ளிகளும், உரிய படிவத்தில் தரப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

6. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும் குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று பேரூராட்சியை யாரும் கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் குறிப்பிட்ட படிவம் மற்றும் ரூ10/- மதிப்பிலான முத்திரைக் காகிதத்தில் தவறாது தனது சொந்தச் செலவில் ஒப்பந்தாரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக ஒப்பந்தப்பத்திரம் பேரூராட்சிக்கு எழுதிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்க தவறினாலோ அல்லது செலுத்தக்கோரிய டேவணித்தொகையை செலுத்தத்தவறினாலோ சமந்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பபட்டு மறு ஒப்பந்தப்புள்ளி பெற்று முடிவு செய்து வேலைகள் செய்து முடிக்கப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் டேவணித்தொகையை பறிமுதல் செய்யப்படும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவணித்தொகை இது சம்பந்தமான கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தகாரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்ததாரர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் ஒப்பந்ததாரருடைய டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றக் கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் பொறுப்பு ஆவதுடன் நஷ்டத்தொகையும் இவரால் செலுத்தப்படவேண்டும்.

10. ஒப்பந்தக்தாரர் மனுவில் வேலைகள் மற்றும் வேலை செய்வதற்காக சதவீதத்தினை தெளிவாக ஒப்பந்தப்புள்ளிகள் எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் முழுக் கையொப்பம் இட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் என்னாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

11. ஒப்பந்ததாரா் ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைக்கு இவரால் சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும் ஆய்வு செய்யும் அலுவலா்கள் மற்றும் பொறுப்பாளா்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரா் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொண்டு தரமான பொருட்களை சப்ளை செய்யவேண்டும்.

12. வடிகால் வேலைகள் எடுத்துச் செய்யும் ஒப்பந்தக்காரா்கள் பணிமுடிந்தவுடன் வேலையின் போது எடுக்கப்பட்ட மண், கல் போன்றவைகளையும் உடனடியாக தனது சொந்த பொறுப்பிலேயே அப்புறப்படுத்த வேண்டும். தவறினால் பட்டியல் அனுமதிக்கப்படமாட்டாது.

13. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தகாரா் தனது சொந்த பொறுப்பில் சரிசெய்து கொடுக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தகாரா் செலுத்தியுள்ள பிணை வைப்புத்தொகையிலிருந்து பழுது பாா்க்கப்படும்.

14. ஒப்பந்தப்பத்திரம் எழுதி பேரூராட்சி அலுவலகத்தில் கொடுத்த தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலை முடிக்கப்படவில்லையானால் மதிப்பீடு தொகையில் % வீதம் வேலை முடிக்கப்படும் வரை குறிப்பிட்ட தேதியிலிருந்து தினசரி அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும். வேலையைகுறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையானால் அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டத்தையும், வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராத கட்டணம் விதிக்கப்பட்டதற்கு பிறகும் வேலையை முடிக்கவில்லையானால், பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி விட்டுவேலையை முடிக்கவும் பேரூராட்சிக்கு அதிகாரம் உண்டு. இதனால் உண்டாகும் இழப்பீடுகளுக்கும் ஒப்பந்தகாரரே பொறுப்பாகும்.

15. தாா்சாலைகளுக்கு தேவையான தாா் பேரூராட்சி மூலம் வழங்கப்படும் தாா் இருப்பு இல்லை எனில் தொழில்நுட்ப அலுவலரின் அறிவுரையின்படி தாா்சாலை அமைக்க தேவைப்படும் தாா் அனுமதிக்கப்பட்ட விலையில் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒப்பந்ததாரரே தன் சொந்த பொறுப்பில் பெற்று பயன்படுத்த வேண்டும். அதற்கான ரசீதுகள் வேலைகளுக்கான பட்டியலுடன் தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

16. தாா்சாலை அமைக்க தேவைப்படும் ரோலா், கட் மாஸ்டா், கலவை இயந்திரம் மற்றும் இதரதளவாடச் சாமான்கள் ஒப்பந்தகாரா் தன் சொந்தப் பொறுப்பில் எடுத்து வேலை செய்ய வேண்டும். அதற்கான ரசீதுகள் மற்றும் லாக் சீட்டுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளிகளுக்கான டேவணித் தொகையில் ஒரு சதவீதம் மட்டும் சேமிப்பு பத்திரமாக ஒப்பந்த புள்ளியுடன் இணைத்து வைக்க வேண்டும் மீதி டேவணித் தொகை 2 சதவீதம் ஒவ்வொரு பட்டியலிலும் ரொக்கமாக பிடித்தம் செய்ய வேண்டும்.

18. ரூ10,000/- க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமானவரி விற்பனை வரி மற்றும் மேல் வரிகள் பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும்.

19. ஒவ்வொரு பட்டியலுக்கும் கட்டிட தொழிலாளா் நலநிதிக்காக ரூ 30% வீதம் பிடித்தம் செய்யப்படும். ஏற்கனவே இப்பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்ததாரா்களுக்கு வேலைக்கான ஷெட்யூல் வழங்கப்படமாட்டாது.

20. சிமிண்ட், கம்பி போன்றவைகள் அரசு ஆணை எண் 5 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 5.1.99 ன்படி ஒப்பந்ததாரா்கள் தனது சொந்த பொறுப்பில் வாங்கி பயன்படுத்த வேண்டும். அதற்கான சான்று மற்றும் ரசீதுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

21. திட்ட பணிகள் செய்யும் போது பணி விபரம் மதிப்பீடு இடம் போன்ற அனைத்து விபரங்களையும் கொண்ட விளம்பரப்பலகைகள் ஒப்பந்தகாரா் தனது சொந்த செலவில் பணியிடத்தில் நிறுவ வேண்டும்.

22. பணி தொடங்கும் முன், தொடங்கும் போது, பணி முடிவுற்ற பின்னா் ஆகிய மூன்று நிலை நிழற்படங்கள் எடுத்து பட்டியலின் போது சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலா்
தோ்வுநிலை பேரூராட்சி
சேத்தூா் - 626121